மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நோக்கத்திற்கும், அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை. இது சட்ட சம்மதத்தைப் பொறுத்த விஷயமா என்பதுபற்றி ஆலோசிக்க வேண்டும்.

Re-organisation of taluks

* 207 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any reorganisation of independent taluks and sub-taluks has been undertaken; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) அண்டு (இ):—1967–68-ம் ஆண்டில், மதுரை மாவட்டத்தில் 4 புதிய வட்டங்களும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 2 புதிய வட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை துணை வட்டம் தனித்துச் செயல்படும் துணை வட்டமாகத் தரம் உயர்த்தப்பட்டது. தருமபுரி மாவட்டத்திலிருந்து தனித்துச் செயல்படும் துணை வட்டமாகப் பாலக்கோடு அமைக்கப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், துறையூரில் தனிப் பொறுப்பில்லாத் துணைத் தாசில்தார் அலுவலகம் தனித்துச் செயல்படும் துணை வட்டமாகத் தரம் உயர்த்தப்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை இலாகாவில் வட்டம், துணைவட்டம் என்று இருப்பதால் காரியங்கள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது, அதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள அத்தனை துணைவட்டங்களை மாற்றி புதிய வட்டங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, வட்டங்கள், துணைவட்டங்கள் என்பது வருவாய்த் துறை நிர்வாக அமைப்பிலே செயல்படும் அமைப்புகளாகும். எங்கெங்கு வருவாய் அதிகமாக இருக்கிறதோ அதையெல்லாம் பிரிப்பதற்கும், சுதந்திரமாக தாசில்தார் செயல்படுவதற்கும் வழிவகை செய்யப்படுகின்றன. பல மாதிரியான ரெவின்யூக்களையும், இனும் எஸ்டேட்டுகளையும் கொண்டு பார்க்கின்ற முறையில் எந்தெந்த வேலைகளை மேற்கொள்ள வேண்டுமோ, அவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் 8 தாலுக்காக்கள்தான் முன்பு இருந்தன. இப்பொழுது நிர்வாக வசதியின்பொருட்டு உத்தமபாளையம், உசிலம்பட்டி, வேடசந்தூர் போன்ற மூன்று தாலுக்காக்களும், மதுரை தாலுக்கா என்று இருந்ததை மதுரை வடக்கு, மதுரை தெற்கு என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரி ஜமீன் இருந்தது. இன்றைக்கு மணப்பாறை என்ற வட்டமும், அரியலூர் வட்டமும் ஏற்பட்டிருக்கின்றன. முன்னாலே உடையார்பாளையம் தாலூகாவாகயிருந்த ஜெயங்கொண்டான் வட்டமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்திலே ஊத்தங்கரை தனித்துச் செயல்படுகிற துணைவட்டமாக செயல்படுகிறது. பாலக்கோடு தனி துணைவட்டமாக உயர்த்தப்பட்டு, சுதந்திரமான தாசில்தாரின் கீழ் செயல்படுகிற வட்டமாக இருக்கிறது. ஆகவே, அவ்வப்பொழுது தேவைகளுக்கும் நிலைமைகளுக்கும் ஏற்றவாறு இவை பிரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை வட்டம் என்னுடைய தொகுதி. இங்கு துணை வட்ட அலுவலகத்தை நமது நிதியமைச்சர் அவர்கள்தான் வந்து துவக்கி வைத்தார்கள். இதை வட்ட ஆட்சி அலுவலகமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். ஊத்தங்கரை ஒரு பெரிய தாலூகா. ஆகவே, அதை வட்ட ஆட்சி அலுவலகமாக மாற்றியமைக்க அரசாங்கம் தக்க உத்தரவுகளை பிறப்பிக்குமா ?

1969 மார்ச் 7]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் கோரிக்கையில் நியாயம் இருக்குமானால் அரசாங்கம் அதைச் செய்வதற்குக் கொஞ்சமும் தயங்காது.

திரு. கா. வேழவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னால், "பெரிய மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, போதிய அளவிற்கு நிர்வாகத்தைச் சீரான முறையில் நடத்த வழிவகை செய்ய வேண்டும், பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான முயற்சி எடுக்கலாம்" என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கான வடிவம் எப்பொழுது அமைக்கப்படும்? மிகப் பெரிய துணைவட்டங்களாக இருப்பவை விரைவில் வட்டங்களாக அறிவிக்கப்பட்டு, நிர்வாகம் சீரான முறையில் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னது மாதிரி, இது எத்தனையோ மாதிரியான அடிப்படைகளைக் கொண்டது. நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்பதற்கு முழுக்க முழுக்க பல காரணங்கள் இருந்தாலும் கூட, அதை நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் செயல்படுத்த வேண்டும். புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட வேண்டுமென்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஒரு மாவட்டம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அதனுடைய பூகோள அமைப்பு சரித்திரப் பூர்வமான காரணங்கள், அதனுடைய பிற்போக்குத் தன்மை, ஜனத்தொகை, போன்ற இத்தனை காரியங்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மாவட்டங்களைப் பிரிப்பதற்கு இவ்வளவு காரியங்களையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொன்றும் முக்கியமானது. ஒரு மாவட்டம் புதிதாக வருகிறது என்றால், அதற்கு ஒரு கோடி ரூபாய் ஒன்றரை கோடி ரூபாய் வரையிலும் செலவாகிறது. நான் வருவாய்த் துறைக்கு மட்டும் பொறுப்பு அல்ல. நிதித் துறைப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொண்டிருக்கும்போது நிதியையும் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு நிலைகளையும் சமப்படுத்துகிற சூழ்நிலையில் முன்னேற்றத்தை அனுசரித்து, அவ்வப்பொழுது தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கோயில்பட்டி தாலுகாவில் உள்ள விளாத்திகுளம் பகுதியை சப்-தாலுகாவாக அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. ஒட்டப்பிடாரம் தாலுகா அமைக்கப்பட்டிருக்கிறது. ஒட்டப்பிடாரத்தைவிட அதிகமான பிர்க்காக்களை விளாத்திக்குளம் பெற்றிருக்கிறது. அதில் ஒரு ஆறு இருக்கிறது. பல பஞ்சாயத்து வட்டங்கள் இருக்கின்றன. டிரஷரி ஆபீஸ் இருக்கிறது. அதிகமான கிராமங்களைக் கொண்டது. ஆகவே, இதை ஒரு தனித் தாலுக்காவாக மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது நியாயமான கோரிக்கையாக இருக்குமானால் அதை ஆலோசிக்க அரசு தயங்காது.

நிலச் சட்டங்கள்

*208 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நில உச்ச வரம்பு சட்டம், நியாய வாரச் சட்டம் ஆகிய சட்டங்களைத் திருத்தம் செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம். அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நில உச்ச வரம்புச் சட்டம் இப்பொழுது இருக்கக்கூடிய அளவில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்றிருப்பதை குறைக்க வேண்டிய நிலை ஏற்படுமா? சிறு நிலச்சுவான்தார்களுக்கு நியாயவாரச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா?